**DEPOSITION OF WITNESS(CIVIL)**
**IN THE COURT OF V ADDITIONAL JUDGE.**

**Case No. : O.S. No. 4496/2019** **Date: 06.11.2025.**

**PW- 1**

Name : Annakumar

Father's Name :
Village :
Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of November, 2025.

---------------------------------------------------------------------------------

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வாதி நிறுவனத்தில் 05.01.2015 அன்று முதல்நிலை மேலாளராக பணிக்கு சேர்ந்தேன். தற்போது பொது மேலாளராக பணிபுரிகிறேன். 2024 ம் வருடம் DGM ஆக பணிபுரிந்தேன். நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் முதல்நிலை மேலாளர் சட்டம் என்று கூறிவிட்டு தற்போது AGM என்று முறனாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ரூ.25,00,000/- நஷ்டஈடு கேட்டு தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதி 1998 முதல் 05.11.2016 வரை எங்கள் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். பிரதிவாதி மேலாளராக (operation) ஆக பணிக்கு சேர்ந்தார். பிரதிவாதி வாதி நிறுவனத்தில் பணிக்கு சேரும் போது Supervisor ஆக வேலைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்தில் Supervisor, executive, assistant manager, manager, Senior Manager, AGM, GM, AVP, VP, Director, COO ஆகிய வரிசைகளில் பதவி உயர்வு வரை இருக்கும். பிரதிவாதி வாதி நிறுவனத்தில் இருந்து பணியில் இருந்து விலகிய போது Regional Manager(Operation) ஆக இருந்தார். 2016 ம் வருடம் நவம்பர் மாதம் பிரதிவாதி

பணி செய்த போது அவர் மீது குற்றச்சாட்டுகள் உள்ளதா என்றால் நிறைய உள்ளது. அது சம்மந்தமாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வாசாஆ.13 முதல் 15 வரை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ.13 இமொயில்லில் மவுண்ட் ரோடுயில் உள்ள அலுவலகம் காலி செய்துவிட்டால் எங்கள் ஒப்பந்தம் ரத்து செய்து விட்டது என்றால் வாடிக்கையாரர் வேறு முகவரிக்கு மாற்றம் செய்த போதும் ஒப்பந்தம் தொடரும். நான் வாசாஆ.13 பொருத்து நான் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.14,15 ஆவணங்கள் 2017ம் வருடத்திற்கு சம்மந்தப்பட்டவை என்றும் அவைகள் பிரதிவாதிக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாதி நிறுவனத்தில் பணிபுரிந்த போது எந்த வித ஒழுங்கின செயலில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. 05.11.2016ம் அன்று அவருக்கு விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பபட்டது. அவ்வாறு விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பியதற்காக ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வாதி நிறுவனத்தில் Regional manager (operation )ஆக பணிபுரிந்த போது அவருக்கு கீழ் 6 நபர்கள் பணிபுரிந்து வந்தனர். Supervisor முதல் manager வரை பல பிரிவில் உள்ள நபர்கள் பிரதிவாதியின் கீழ் பணிபுரிந்து வந்தனர். வாதி நிறுவனம் housekeeping, plumbing, electrical உள்ளிட்ட வேலைகளுக்கு மனித வளங்களை பல நிறுவனங்களுக்கு வழங்கும் சேவை செய்து வருகிறேது. இந்திய முழுவதும் 62,000/− நபர்களை பணிக்கு சேவைக்கு வழங்கி வருகிறது. வாதி நிறுவனமும் மற்ற நிறுவனங்களும் இடையே ஒப்பந்தகளில் அடிப்படையில் சேவைகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் 30 நாள் முன்அறிவிப்புடன் ரத்து செய்து கொள்ளாலம். வாதி தரப்பில் ஒப்பந்தத்தை directorகள் ஏற்படுத்துவர்கள்

என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்தில் AVP, AP பொறுப்பில் உள்ளவர்கள் ஏற்படுத்துவர். பிரதிவாதி இறுதியாக பணிபுரிந்த regional Manager (Operation ) பணி என்ன என்றால் வாடிக்கையார்களுக்கு சேவை செய்வது, தேவைக்கை ஏற்ப மனிதவளங்களை அனுப்புவது, invoice கொடுத்து அதற்குரிய bills வசூல் செய்வது, வாடிக்கையார்களில் குறைகளை தீர்ப்பது ஆகியவை ஆகும். வாதி நிறுவனத்தில் finance என்ற பிரிவு உள்ளது. பிரதிவாதிக்கு invoice கொடுத்து bill தொகையை வசூலித்து கொடுப்பது பிரதிவாதி வேலை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாதி நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் பிரதிவாதிக்கு எதிராக எந்த வித புகாரும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எதிராக புகார் கொடுக்கப்படவில்லை என்றும் அதனால் தான் அதற்குரிய ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மணிகண்டன் என்பவர் வாதி நிறுவனத்தில் AVP Operation ஆக பணிபுரிந்து வந்தார். தற்போது பணியில் இல்லை. அவர் பிரதிவாதிக்கு நெருங்கிய உறவினர். வாதி நிறுவனத்தில் AVP Operation என ஒரு பதவி உள்ளது. மாரியப்பன் எனபவர் VP (commercial) ஆக பணிபுரிந்து வந்தார். பிரதிவாதி மேற் சொன்ன மாரியப்பன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் பிரதிவாதிக்கு கீழ் பணிபுரிந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மாரியப்பன் VP (commercial) பதவியில் இருந்தார். VP (commercial) என்பது வாதி நிறுவனத்திக்கு புதிய வாடிக்கையாளர்களை கொண்டுவருவது ஆகும். வாசாஆ.13 முதல் 15 வரை உள்ள ஆவணங்கள் எங்கள் நிறுவனத்தில் சேவை குறைப்பாடு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ.14 வாதி நிறுவனத்தில் ரத்து செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.15 ஆவணம் வாதி நிறுவனத்திற்கு வரவேண்டிய தொகை சம்மந்தப்பட்டது என்றும் சேவை குறைப்பாட்டுக்கு சம்மந்தப்பட்ட

ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 6ல் நான் கூறியுள்ள 2 நிறுவனங்களுக்கும் பிரதிவாதிக்கும் எந்த வித சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.4,5 ல் ஆவணங்களில் பிரதிவாதி பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும் எனவே பிரதிவாதிக்கு அந்த ஆவணங்களுக்கும் சம்மந்தம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 7 முதல் 10 பிரதிவாதிக்கு எதிராக எந்த வித அடிப்படை ஆதாரம் இன்றி குற்றச்சாட்டுகள் கூறியுள்ளேன் எனன்றால் சரியல்ல. முதல் விசாரணை பத்தி 11ல் அம்பத்தூர் TE Cycle நிறுவனம் சம்மந்தமாக ரூ.6,85,739/– எந்த வகையில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் TE Cycle நிறுவனத்திற்கு தேவையான மனிதவளங்களை அனுப்பாத காரணத்தில் உற்பத்தி இழப்பு ஏற்பட்டு அந்த இழப்பை எங்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையில் பிடித்தம் செய்து விட்டனர். அதற்காக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற் சொன்ன வாரு வாதி நிறுவனத்திற்கு எந்த வித இழப்பும் ஏற்படவில்லை என்றும் பிரதிவாதி எதிராக பழி சொல்லும் நோக்கில் தவறான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 05.11.2016 பிரதிவாதி எங்கள் நிறுவனத்தில் இருந்து அவராகவே பணியில் இருந்து விலகுவதற்கு ராஜினாமா செய்தார் அதை நாங்கள் ஏற்று கொள்ளவில்லை. அதில் இருந்து அவர் பணிக்கு வராமல் இருந்து விட்டார். பிரதிவாதியின் ராஜீனாமா ஏற்ற கொள்ளவில்லை என்ற விவரத்தை விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பியுள்ளோம். வாசாஆ.8ல் பிரதிவாதி விளக்கம் அறிவிப்பில் பிரதிவாதி ராஜினாமா செய்தது குறித்தும் அதை வாதி நிறுவனம் ஏற்று கொள்ளவில்லை என்று கூறப்படவில்லை என்றால்

வாசாஆ.8 அறிவிப்புக்கு பின்னர் தான் பிரதிவாதி ராஜினாமா கடிதம் அனுப்பினார். வாசாஆ.8 அறிவிப்பை பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. பதிவு தபால் அனுப்பிதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அந்த அறிவிப்பு unclaimed என்று திரும்பி வந்துவிட்டது. திரும்பி வந்த பதிவு தபால் கவரையை தாக்கல் செய்யவில்லை. வாசாஆ.8 விளக்கம் கேட்டு அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி ராஜினாமா செய்து கடிதம் அனுப்பிய பிறகு பின் யோசணையிட்டு முதன் தேதியிட்டு வாசாஆ.8 அறிவிப்பு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.8 அறிவிப்பு unclaimed என்று திருப்பி வந்த பிறகு பிரதிவாதிக்கு மின்னஞ்சல் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அது வாசாஆ.9 அந்த மின்னஞ்சலும் திரும்பி வந்து விட்டது. வாசாஆ.9 மின்னஞ்சல் விளக்கம் கேட்கும் அறிவிப்பு சம்மந்தப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.8 அறிவிப்பு அனுப்பியதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பிய விவரம் வழக்குரை பத்தி 11ல் குறிப்பிடப்பட்டுள்ளது அதை பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் மறுக்கவில்லை என்பதால் கேள்வி கேட்க அனுமதி மறுக்கப்படுகிறது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் வழக்கு மாற்றம் செய்ய போவதாக தெரிவித்தன் பேரில் குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dt. 06.11.2025

I Addl. District Judge.